# கூட்டுறவு, உணவு மற்றும்
# நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

### மானியக் கோரிக்கை எண். 13


**அர. சக்கரபாணி**

உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| இயல் எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 1 – 54 |
| 2. | நுகர்வோர் பாதுகாப்பு | 55 - 74 |
| 3. | விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 75 – 78 |
| 4. | அமலாக்கம் | 79 – 84 |
| 5. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 85 – 118 |
| 6. | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 119 - 126 |

# இயல் -1

# உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## முன்னுரை

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.**

- அய்யன் திருவள்ளுவர்

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு என்பது அரசின் உணவுக் கொள்கையில் முதன்மையானதாகும். இக்கொள்கையை நிறைவேற்றிட அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

நுகர்வோர் நலனை மேம்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும். சமீபத்திய ஆண்டுகளில் நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்திருந்தாலும், புதிய முறையற்ற விற்பனை மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை எதிர்கொள்ளும் வகையில் இந்த விழிப்புணர்வு நிலை வளர வேண்டும். தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் உதவியுடன் ஊடகப் பரப்புரைகள், வெளியீடுகள், பயிற்சித் திட்டங்கள் வழியாக, சில வர்த்தகர் மற்றும் உற்பத்தியாளர்களின் சுரண்டல் வர்த்தக நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும்



அரசு எடுத்து வருகிறது. இவை மட்டுமல்லாமல் மாவட்ட மற்றும் மாநில அளவில் நுகர்வோர் ஆணையம் மூலமாக சட்டரீதியான தீர்வுகளும் வழங்கப்படுகின்றன.

## 1. பொது விநியோகத் திட்டம்

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அங்கீகரித்துள்ளபடி "உணவுக்கான உரிமை என்பது வாழ்வதற்கான அடிப்படை உரிமையில் அடங்கி உள்ளது". குறிப்பாக, ஏழை மற்றும் நலிந்த பிரிவினருக்கு உணவுப் பாதுகாப்பை வழங்குவதே அரசின் பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை அனைவருக்கும் நீடித்திட எந்தவித பொருளாதார மற்றும் சமூகப் பாகுபாடும் இல்லாமல் எவர் ஒருவரும் பசியுடன் இருக்கக்கூடாது என்பதை உறுதிசெய்திட தமிழ்நாடு அரசு கடந்த 40 ஆண்டுகளாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்ட முறையை (UPDS) செயல்படுத்தி வருகிறது. கோவிட் – 19 பெருந்தொற்று காலத்தில், மக்களின் துயரினைக் குறைப்பதற்காக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4000/- நிவாரணத் தொகை, இரண்டு தவணைகளாக மே மற்றும் ஜூன், 2021 மாதங்களில் வழங்கப்பட்டதுடன்



14 வகையான மளிகைப் பொருள்கள் தொகுப்பும் வழங்கப்பட்டது.

## 1.1 நியாய விலைக் கடைகள்

பொது விநியோகத் திட்டத்தில், இன்றியமையாப் பொருள்களைச் சேமித்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்வதற்கான அடிப்படை அலகாக நியாய விலைக் கடை செயல்படுகிறது. பெரும்பாலான நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்பட்டு வருகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களும் குறைந்த எண்ணிக்கையிலான நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மொத்தமாக

தமிழகத்தில் 35,323 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. தனியார் நிறுவனங்களின் எவ்விதப் பங்களிப்புமின்றி நியாய விலைக் கடைகளை நடத்துவதே தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்தின் சிறப்பம்சம் ஆகும்.

## 1.2 முழுக் கணினிமயமாக்கல்

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கணினிமயமாக்கல் திட்டத்தின் மூலம் நியாய விலைக் கடைகளின் அனைத்து விற்பனைப் பரிவர்த்தனைகளும் தானியங்கி முறையில் நடைபெறுகின்றன. உணவு தானியங்களின் இருப்பு மற்றும் இவற்றின் பல்வேறு நிலைகளிலான



இன்றியமையாப் பொருள்களின் நகர்வு நிகழ்நேர முறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது, இதனால் வெளிப்படைத்தன்மையுடன், துறையினால் வழங்கப்படும் சேவைகள் மக்களை எளிதாகச் சென்றடைகின்றன. உண்மையான குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவதை உறுதி செய்திட, கைவிரல் ரேகை பதிவு செய்து விற்பனை முனைய இயந்திரம் மூலம் மட்டுமே இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தொடர் கண்காணிப்பின் மூலமாக மாநிலம் முழுவதும் 97% பரிவர்த்தனைகள் கைவிரல் ரேகை படிப்பி மூலம் நடைபெறும் நிலை எட்டப்பட்டுள்ளது.

21.03.2022 அன்றுள்ளபடி மாநிலத்தில் உள்ள நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை விவரம்:

| வ. எண் | நிறுவனம் | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குபவை) | 23,243 | 9,995 | 33,238 |
| 2. | இதர கூட்டுறவுச் சங்கங்கள் | 114 | 27 | 141 |
| 3. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,224 | 236 | 1,460 |
| 4. | மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 463 | 21 | 484 |
| | **மொத்தம்** | **25,044** | **10,279** | **35,323** |



குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து அதிக தூரம் செல்லாமல் இன்றியமையாப் பொருள்களைப் பெற்றிடும் வகையில் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள், தொலைதூரம் மற்றும் மலைப் பகுதிகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் மலைப்பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களின் சேவைக்காக 1997-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நடமாடும் நியாய விலைக் கடைகளும் செயல்பாட்டில் உள்ளன.

6,978 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. மேற்குறிப்பிட்ட நியாய விலைக் கடைகளுக்கு படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 756 நியாய விலைக் கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 109 கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 1.3 மின்னணு குடும்ப அட்டைகள்

முழு கணினிமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி அனைத்து



இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. 07.05.2021 முதல் 21.03.2022 வரை 10,92,064 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 01.04.2017 முதல் அனைத்து மின்னணு குடும்ப அட்டைகளும் ஆதார் எண் பதிவு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதார் அட்டை எடுக்க இயலாதவர்கள் ஆதார் அட்டை இல்லாமல் அவர்களது பெயரைப் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.3.1 மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்

மின்னணு குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் தேவை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் 5 வகையான மின்னணு குடும்ப அட்டைகள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. 21.03.2022 நிலவரப்படி பயன்பாட்டில் உள்ள மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரங்கள் :-



| வ. எண் | குடும்ப அட்டையின் வகை | மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH) * | 91,88,396 |
| 2. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்ன யோஜனா (PHH - AAY)* | 18,64,201 |
| 3. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (OAP/ANP) (PHH) | 3,73,197 |
| 4. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH)** | 1,02,63,336 |
| 5. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – சர்க்கரை (NPHH - S)** | 3,83,756 |
| 6. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC) | 58,146 |
| ஆக மொத்தம் | | 2,21,31,032 |

* ஒன்றிய அரசின் ஒதுக்கீடு

** மாநில அரசின் ஒதுக்கீடு

## 1.3.2 அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைகள்

ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி வறியவர்களிலும் வறியோரை உயர்த்தும் உணவுத் திட்டத்தின் கீழ், வறியவர்களிலும் வறிய குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேவையின் அடிப்படையில் அவ்வப்போது விரிவுப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மொத்த உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. நம் மாநிலத்தில் உள்ள அந்தியோதய அன்னயோஜனா குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 18,64,201 ஆகும். இக்குடும்ப அட்டைதாரர்களுக்கு இதர இன்றியமையாப் பொருள்களும்



விநியோகிக்கப்படுகின்றன. இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

## 1.3.3 திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்குதல்

திருநங்கைகள் சமூகத்துடன் இணைந்த மக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசால், தனிநபராகவோ, குடும்பமாகவோ வசித்து வரும் திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு. 21.03.2022 வரை 2,429 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.4 காவல், சிறை மற்றும் வனத்துறைப் பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்

சீருடைப் பணிகளில் இரண்டாம் நிலைக் காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலும், வனக்காவலர் முதல் வனச்சரகர் வரையிலும், இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலும் முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (Non Priority House Hold - NPHH) வழங்கப்படுகின்றன. இவர்கள் அனைவரும் நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரங்களில் 'காவலர் அட்டை' என்பதின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். சீருடைப் பணியாளர்களின் நலன் கருதி, கீழ்க்கண்ட இன்றியமையாப் பொருள்களான, துவரம் பருப்பு,



சர்க்கரை மற்றும் பாமோலின் ஆகியவை பொது விநியோகத்திட்ட விலையில், பாதி விலையில் காவல் துறை பணியாளர்களுக்கு நியாய விலைக் கடைகளில் கீழ்க்குறிப்பிட்ட விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| சர்க்கரை | : | ரூ. 12.50 / கிலோ |
| துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு | : | ரூ. 15.00 / கிலோ |
| பாமோலின் | : | ரூ. 12.50 / லிட்டர் |

21.03.2022 நிலவரப்படி, 63,506 'காவலர் குடும்ப அட்டைகள்' உள்ளன.

### 1.3.5 பாலியல் தொழிலாளர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்ட விவரம்

இம்மாநிலத்தில் தனியாகவோ அல்லது குடும்பமாகவோ வசிக்கும் பாலியல் தொழிலாளர்களுக்கு மின்னணு குடும்ப அட்டை வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 21.03.2022 வரை 86,986 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.6 பொது விநியோகத் திட்டத்தில் அன்னபூர்ணா (ANP) மற்றும் முதியோர் உதவித் தொகை (OAP) பெறும் பயனாளிகளுக்கு அரிசி வழங்குதல்

தமிழ்நாட்டில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் 7,240 அன்னபூர்ணா (ANP) பயனாளிகளுக்கும் மற்றும் 3,65,957 முதியோர் உதவித் தொகை பெறும்



(OAP) பயனாளிகளுக்கும் முறையே 10 கிலோ மற்றும் 5 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

### 1.4 பொது விநியோகத் திட்டத்தில் இன்றியமையாப் பொருள்கள் விநியோக அளவு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பு மற்றும் பாமோலின் வழங்கப்படுகின்றன. பொது விநியோகத் திட்டத்தில் இன்றியமையாப் பொருள்கள் விநியோக அளவு மற்றும் விலை விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | இன்றிய-மையாப் பொருள்கள் | விநியோக விலை (கிலோ/ லிட்டர்) | விநியோக அளவு |
|---|---|---|---|
| 1. | அரிசி | விலையில்லை | தமிழ்நாட்டில் 01.11.2016 முதல் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில் எந்தவொரு மாற்றமுமில்லாமல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் - 2013 நடைமுறைப் படுத்தப்பட்டது. தற்போது அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில் உள்ள உரிம அளவை விட குறையாமல் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு நபருக்கு 5 கிலோ அரிசி (குழந்தை உட்பட) வழங்கப்படுகிறது.<br>ஒரு நபர் குடும்ப அட்டைகளுக்கு |



| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 12 கிலோ அரிசியே வழங்கப்படுகிறது.<br>1 அலகு – 12 கிலோ<br>1.5 அலகு – 14 கிலோ<br>2 அலகு – 16 கிலோ<br>2.5 அலகு – 18 கிலோ<br>3 (அ) 4 அலகு – 20 கிலோ<br>5 மற்றும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு அலகிற்கும் 5 கிலோ அரிசி வீதம் உயர்த்தி வழங்கப்படுகிறது.<br>AAY குடும்ப அட்டைகளுக்கு 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. |
| 2. | கோதுமை | விலையில்லை | சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் 10 கிலோ வீதமும் மற்றும் இதர இடங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | 5 கிலோ வீதமும் அரிசிக்கு மாற்றாக வழங்கப்படுகிறது. |
| 3. | சர்க்கரை | AAY குடும்ப அட்டைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.13.50 மற்ற குடும்ப அட்டைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25 | ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 500 கிராம் வீதம் அதிகபட்சம் 2 கிலோ வழங்கப்படுகிறது. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 500 கிராம் வீதம் மற்றும் கூடுதலாக 3 கிலோ சேர்த்து அதிகபட்சமாக 5 கிலோ வழங்கப்படுகிறது. |
| 4. | மண்ணெண்ணெய் | ஒரு லிட்டர் ரூ.15 முதல் ரூ.16.50 வரை | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பு |



| | | | |
|---|---|---|---|
| | | | ஆகியவற்றை பொறுத்து ஒரு குடும்ப அட்டைக்கு 3 முதல் 15 லிட்டர் வரை |
| 5. | துவரம் பருப்பு | ஒரு கிலோ - ரூ.30 | ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ |
| 6. | பாமோலின் | ஒரு லிட்டர் - ரூ.25 | ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு லிட்டர் |

## 1.5 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருள்கள் வழங்குதல்

### 1.5.1 அரிசி

அரிசி தமிழ்நாட்டின் முதன்மையான உணவாகும். பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து இந்திய

உணவுக் கழகத்திடமிருந்து பெறப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் தற்போதைய அரிசி ஒதுக்கீடு மற்றும் விலை விவரம் பின்வருமாறு :-

| வ. எண். | வகை | மாத ஒதுக்கீடு (மெ.டன்னில்) | விலை ஒரு கிலோவிற்கு ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | முன்னுரிமை குடும்ப அட்டை-அந்தியோதயா அன்னயோஜனா (PHH- AAY) | 58,734.900 | 3.00 |
| 2 | முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) | 1,33,243.083 | 3.00 |
| 3 | ஈடுசெய் இழப்பு (Tide Over) | 83,853.417 | 8.30 |
| மொத்தம் | | 2,75,831.4 | - |

தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் பின்பற்றப்படுவதனால்,



முன்னுரிமையற்ற குடும்பங்களுக்கு ஒன்றிய அரசின் ஒதுக்கீட்டினை விட 1,29,432.268 மெ.டன் அரிசி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இச்செலவு முழுமையாக தமிழக அரசால் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு மாதத்திற்கு சராசரியாக 3.20 லட்சம் மெட்ரிக் டன் அரிசி நுகர்வு செய்யப்படுகிறது.

### 1.5.2 சர்க்கரை

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான சர்க்கரை முழுவதும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் வெளிச் சந்தையில் மாநில அரசால் கொள்முதல் செய்யப்பட்டு

கீழ்க்கண்ட விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

I. AAY குடும்ப அட்டைகளுக்கு ஒரு கிலோ சர்க்கரை ரூ.13.50 என்ற விலையில் வழங்கப்படுகிறது. (ஒன்றிய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் 1864 மெ.டன் சர்க்கரை கிலோ ரூ.18.50 என்ற விலையில் வழங்கப்படுகிறது)

II. AAY குடும்ப அட்டைகள் தவிர மற்ற குடும்ப அட்டைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- என்ற விலையில் வழங்கப்படுகிறது. இந்த விலை வித்தியாசத் தொகை மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.



### 1.5.3 கோதுமை

நம் மாநிலத்திற்கு ஒன்றிய அரசால் மாதம் ஒன்றுக்கு 30,647.90 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்கள், அரிசிக்கு மாற்றாக தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் 10 கிலோ வீதமும், இதர இடங்களில் 5 கிலோ வீதமும் விலையில்லாமல் பெற்றுக் கொள்ளலாம். இம்முறை தமிழ்நாட்டு மக்களுக்கு தங்களின் முதன்மையான உணவு

தானியத்தினை தேர்வு செய்வதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.

### 1.5.4 மண்ணெண்ணெய் ஒதுக்கீடு

ஒன்றிய அரசினால் மண்ணெண்ணெய்க்கான மாதாந்திர ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தில், எரிவாயு இணைப்பில்லாத மற்றும் ஒரு உருளை இணைப்பு மட்டும் உடைய குடும்ப அட்டைதார்களுக்குச் சமையல் மற்றும் விளக்கேற்றும் பயன்பாட்டிற்காக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. 21.03.2022 அன்றைய நிலவரப்படி, மண்ணெண்ணெயின் மாதாந்திரத் தேவை 36,953 கிலோ லிட்டர் ஆகும். ஆனாலும், ஒன்றிய அரசு நம் மாநிலத்திற்கு,



ஏப்ரல் 2006 மாதம் 59,852 கிலோ லிட்டர் என இருந்த ஒதுக்கீட்டு அளவை ஏப்ரல் 2021 மாதம் 7,536 கிலோ லிட்டர் என வெகுவாகக் குறைத்துள்ளது. இது நம் மாநிலத் தேவையில் 20 % மட்டுமே ஆகும். குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்க ஒன்றிய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### 1.6 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

மக்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருள்களை வழங்கும் பொருட்டு 2007-ஆம் ஆண்டு அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்

தலைமையிலான அரசு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மானிய விலையில் 1 கிலோ துவரம் பருப்பு மற்றும் 1 லிட்டர் பாமோலின் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் சுமார் 20,000 மெ.டன் துவரம் பருப்பு மற்றும் 2,00,00,000 லிட்டர் பாமோலின் பாக்கெட்டுகள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தினை மாநில அரசு செப்டம்பர் 2022 வரை நீட்டித்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவினம் முழுவதும் மாநில அரசால் ஏற்கப்படுகிறது.



### 1.7 ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களுக்குப் பச்சரிசி வழங்குதல்

ரமலான் மாதத்தில் நோன்பு மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்குச் சிறப்பு ஒதுக்கீடாக பச்சரிசி வழங்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் 1 கிலோ பச்சரிசி 1 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென நடப்பு ஆண்டிலும் 6000 மெ.டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மாநில அரசு ரூ.13.53 கோடி மானியமாக வழங்குகிறது.

## 1.8 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 – அமலாக்கம்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, நம் மாநிலத்தில் 01.11.2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, முன்னுரிமைக் குடும்பங்களின் ஒவ்வொரு நபரும் மாதமொன்றுக்கு, 5 கிலோ அரிசியினைப் பெற தகுதியுடையவராவார். இருப்பினும், தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதால் அதனடிப்படையில் அனைத்து அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கும் முந்தைய உரிம அளவு அல்லது ஒரு நபருக்கு 5 கிலோ உரிம அளவு இவற்றில் எது அதிகமோ



அந்த அளவு அரிசி விலையில்லாமல் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு, உரிய விதிமுறைகளின் கீழ் முன்னுரிமை குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களது விவரங்கள் www.tnpds.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, திருநங்கையர் உள்ளிட்ட விளிம்பு நிலையில் உள்ள/ பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள 58 வகையான பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## 1.9 கண்காணிப்புக் குழுக்கள்

பொது விநியோகத்திட்டத்தினை முறையாகவும், வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்திடவும், அமலாக்க அலுவலர்களுக்கான பொறுப்பினை உறுதி செய்திடவும், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள்-2017ன் படி, மாநில, மாவட்ட, வட்ட மற்றும் நியாய விலைக் கடை அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கூட்டங்கள் உரிய கால இடைவெளியில் நடத்தப்பட்டு, இத்திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.



## 1.10 குறைதீர் அமைப்பு முறை

பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டும் பொது விநியோகத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டும், மாவட்ட வருவாய் அலுவலர்கள் / துணை ஆணையாளர்கள், மாவட்ட குறைதீர் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட குறைதீர் அலுவலர்களது முகவரி விவரங்கள் இணையதளத்திலும், நியாய விலைக் கடைகளிலும் பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் தமது குறைகள் /

ஆலோசனைகளை 1967 மற்றும் 1800-425-5901 ஆகிய பிரத்யேக கட்டணமில்லா தொலைபேசி சேவை மூலமாகவும், "tnpds" இணைய முகப்பு மூலமாகவும், பதிவு செய்யலாம். இது மட்டுமின்றி, நியாய விலைக் கடைகளிலுள்ள புகார் பதிவேட்டிலும் பொது மக்கள் தங்களது குறைகளைப் பதிவு செய்யலாம்.

## 1.11 மாநில உணவு ஆணையம்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன் படி, தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் முறையாக அமலாக்கப்படுவதைக் கண்காணிக்கும் பொருட்டு, ஒரு தலைவர் மற்றும்



நான்கு உறுப்பினர்களைக் கொண்ட மாநில உணவு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. உரிய கால இடைவெளியில், ஆணையத்தின் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் சிறப்பாக அமலாக்கப்படுவதற்கான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

## 1.12 பொது விநியோகத் திட்டத்தினை முழுக் கணினிமயமாக்கல்

மாநில பொது விநியோகத் திட்டம் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஆதார் எண்கள் இணைக்கப்பட்ட அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும்

மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் அளிக்கும் வசதிகள்

- குடும்ப அட்டைகள் / பயனாளிகளின் தரவினை டிஜிட்டல் மயமாக்கல்;
- விநியோகச் சங்கிலி மேலாண்மையைக் கணினிமயமாக்குதல்;
- திறன்மிகு குறைதீர் அமைப்புகள்;
- பொது விநியோகத் திட்டத்திற்கான இன்றியமையாப் பொருள்களின் ஒதுக்கீட்டினை இணையவழியில் மேற்கொள்ளுதல்;



- கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருள்களின் நகர்வினை நிகழ்நேரத்தில் கண்காணித்தல்;
- பொது மக்கள் இணையம் வழியாக புதிய குடும்ப அட்டைகள் பெற விண்ணப்பம் செய்தல், குடும்ப அட்டைகளில் விவர மாற்றம் மேற்கொள்ளுதல் மின்னணு குடும்ப அட்டை தொடர்பான விண்ணப்பங்களின் நிலை பற்றி அறிந்து கொள்ளுதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளல்;
- குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய

விலைக் கடையில் உள்ள இன்றியமையாப் பொருள்களின் இருப்பு விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்;

- ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அவர் பதிவு செய்துள்ள கைபேசிக்கு இன்றியமையாப் பொருள்கள் விநியோகிக்கப்பட்ட விவரம் குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்படுவதால் போலி ரசீது போடுவது தடுக்கப்படுகிறது.



### 1.13 கைவிரல் ரேகை அங்கீகாரத்துடன் பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உரிய பயனாளிகள் பொருள்கள் பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, 01.10.2020 முதல் கைவிரல் ரேகைப் பதிவு முறை மூலம் சரிபார்த்து பொது விநியோகத் திட்டப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இது நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் தடுக்கப்படுவதை உறுதி செய்கிறது.

நியாய விலைக் கடைகளுக்குச் செல்ல முடியாத வயதான மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குச் சேவை வழங்குவதை உறுதி செய்வதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மூலமாக இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. பயனாளிகள் தங்களது அதிகாரமளிப்பு கடிதத்தினை நியாய விலைக்கடை விற்பனையாளருக்கு முகவரியிட்டு அளிக்கலாம். மேலும், கைவிரல் ரேகையைப் பதிவு செய்ய இயலாத நபர்களுக்கு மாற்று வழிமுறைகளின்படி பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால், குறிப்பாக வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.



**பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கைவிரல் படிப்பி மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் (21.03.2022 வரை)**

| வ.எண் | மாவட்டம் | மொத்த பரிவர்த்தனைகள் | கைவிரல் படிப்பி உள்ள நியாய விலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் | கைவிரல் படிப்பி மூலம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் | கைவிரல் படிப்பி % | கைவிரல் படிப்பி செயலிழப்பு | கைவிரல் படிப்பி இல்லா நியாய விலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | புதுக்கோட்டை | 4,20,766 | 4,20,766 | 4,17,171 | **99.15** | 3595 | - |
| 2 | அரியலூர் | 2,13,605 | 2,12,631 | 2,10,714 | **99.10** | 1917 | 974 |
| 3 | சென்னை (தெற்கு) | 7,03,267 | 7,03,267 | 6,96,897 | **99.09** | 6370 | - |
| 4 | விருதுநகர் | 5,14,744 | 5,14,744 | 5,09,106 | **98.90** | 5638 | - |
| 5 | சென்னை (வடக்கு) | 7,36,994 | 7,36,994 | 7,28,596 | **98.86** | 8398 | - |
| 6 | கடலூர் | 5,40,376 | 5,40,375 | 5,33,019 | **98.64** | 7356 | 1 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 7,23,974 | 7,19,719 | 7,09,869 | **98.63** | 9850 | 4,255 |
| 8 | திருவாரூர் | 3,33,401 | 3,33,401 | 3,28,178 | **98.43** | 5223 | - |
| 9 | தர்மபுரி | 4,19,424 | 4,01,190 | 3,94,881 | **98.43** | 6309 | 18,234 |
| 10 | திருவண்ணாமலை | 6,31,767 | 6,19,346 | 6,09,022 | **98.33** | 10324 | 12,421 |
| 11 | சிவகங்கை | 2,83,338 | 2,82,717 | 2,77,510 | **98.16** | 5207 | 621 |
| 12 | கரூர் | 2,98,412 | 2,97,948 | 2,92,361 | **98.12** | 5587 | 464 |
| 13 | தஞ்சாவூர் | 6,85,672 | 6,85,672 | 6,72,708 | **98.11** | 12964 | - |
| 14 | நீலகிரி | 1,53,113 | 1,34,279 | 1,31,489 | **97.92** | 2790 | 18,834 |
| 15 | நாமக்கல் | 4,33,213 | 4,19,158 | 4,09,736 | **97.75** | 9422 | 14,055 |
| 16 | நாகப்பட்டினம் | 1,84,647 | 1,80,829 | 1,76,496 | **97.60** | 4333 | 3,818 |
| 17 | கன்னியாகுமரி | 3,99,136 | 3,95,532 | 3,85,974 | **97.58** | 9558 | 3,604 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | திருநெல்வேலி | 4,44,410 | 4,43,207 | 4,32,193 | **97.51** | 11014 | 1,203 |
| 19 | சேலம் | 9,36,329 | 9,09,080 | 8,85,330 | **97.39** | 23750 | 27,249 |
| 20 | மதுரை | 6,93,769 | 6,93,759 | 6,75,432 | **97.36** | 18327 | 10 |
| 21 | தேனி | 3,14,261 | 2,95,168 | 2,87,321 | **97.34** | 7847 | 19,093 |
| 22 | கிருஷ்ணகிரி | 4,58,408 | 4,35,620 | 4,23,946 | **97.32** | 11674 | 22,788 |
| 23 | காஞ்சிபுரம் | 3,26,156 | 3,26,155 | 3,17,309 | **97.29** | 8846 | 1 |
| 24 | ஈரோடு | 6,10,394 | 5,91,533 | 5,74,034 | **97.04** | 17499 | 18,861 |
| 25 | மயிலாடுதுறை | 2,60,789 | 2,60,789 | 2,53,069 | **97.04** | 7720 | - |
| 26 | செங்கல்பட்டு | 2,99,862 | 2,99,862 | 2,90,876 | **97.00** | 8986 | - |
| 27 | திருப்பத்தூர் | 2,61,257 | 2,52,773 | 2,44,637 | **96.78** | 8136 | 8,484 |
| 28 | பெரம்பலூர் | 1,85,834 | 1,81,032 | 1,74,992 | **96.66** | 6040 | 4,802 |
| 29 | திருப்பூர் | 5,62,227 | 5,60,890 | 5,41,819 | **96.60** | 19071 | 1,337 |
| 30 | திருவள்ளூர் | 4,83,832 | 4,83,832 | 4,67,099 | **96.54** | 16733 | - |
| 31 | இராமநாதபுரம் | 2,53,178 | 2,53,178 | 2,44,237 | **96.47** | 8941 | - |
| 32 | தூத்துக்குடி | 4,52,124 | 4,52,124 | 4,35,831 | **96.40** | 16293 | - |
| 33 | கள்ளக்குறிச்சி | 3,21,484 | 3,09,828 | 2,98,217 | **96.25** | 11611 | 11,656 |
| 34 | கோயம்புத்தூர் | 7,48,744 | 7,48,744 | 7,19,739 | **96.13** | 29005 | - |
| 35 | திண்டுக்கல் | 5,24,609 | 4,95,339 | 4,75,634 | **96.02** | 19705 | 29,270 |
| 36 | வேலூர் | 3,70,779 | 3,65,536 | 3,50,265 | **95.82** | 15271 | 5,243 |
| 37 | விழுப்புரம் | 4,77,801 | 4,73,707 | 4,52,300 | **95.48** | 21407 | 4,094 |
| 38 | தென்காசி | 3,79,324 | 3,77,863 | 3,58,915 | **94.99** | 18948 | 1,461 |
| 39 | ராணிப்பேட்டை | 2,85,126 | 2,85,126 | 2,70,613 | **94.91** | 14513 | - |
| மொத்தம் | | **1,73,26,546** | **1,70,93,713** | **1,66,57,535** | **97.45** | **4,36,178** | **2,32,833** |



## 1.14 ஒருங்கிணைந்த மேலாண்மை வழியாக பொது விநியோகத் திட்டம் (IM-PDS)

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மேலாண்மை வழியாக பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம் தமிழ்நாட்டில் அக்டோபர் 2020 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது பிற மாநிலங்களைச் சேர்ந்த முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் கைவிரல் ரேகைப் பதிவிடுதல் மூலம் ஆதார் பதிவுகளைச் சரிபார்த்தல் முறையில் தங்களுக்கான இன்றியமையாப் பொருள்களைப் பெற வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ், மாநிலத்திற்குள்ளான இடம் பெயர் வசதியின் மூலம்

குடும்ப அட்டைதாரர்கள் தமிழ்நாட்டிற்குள் தங்கள் முகவரியை மாற்றாமல், தங்களுக்குரிய இன்றியமையாப் பொருள்களை விலையில்லாமலோ அல்லது மானிய விலையிலோ பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பிற மாநிலத்தைச் சேர்ந்த முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் அரிசி ரூ.3/- என்ற விலையிலும், கோதுமை ரூ.2/- என்ற விலையிலும் இம்மாநிலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



## 1.15 கொரோனா நிவாரண நடவடிக்கைகள்

கொரோனா தொற்று நோய் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பொது மக்களின் துயர் துடைக்கும் பொருட்டு 2,09,81,900 அரிசி அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவியாக ரூ.4000/- மே 2021 மற்றும் ஜூன் 2021 மாதங்களில் இரு தவணைகளில் தலா ரூ.2000/- வீதம் விநியோகிக்கப்பட்டு, ரூ.8,392.76 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகையினை 99.2% அரிசி குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பண உதவியுடன், ரூ.977.10 கோடி செலவில், 14 மளிகைப் பொருள்கள்

அடங்கிய தொகுப்பு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டன. இந்தப் பலனை 99% குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுள்ளனர்.

மே 2021 மற்றும் ஜூன் 2021 ஆகிய மாதங்களில் தலா ரூ.2000/- வழங்கப்பட்ட பண உதவி மற்றும் 14 மளிகை பொருள்கள் அடங்கிய தொகுப்பு திருநங்கைகள் மற்றும் மறுவாழ்வு முகாம்களில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

### 1.16 பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல்

2022 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு துணிப்பை உள்ளிட்ட 21 பொருள்களின் பரிசுத்



தொகுப்பு அரிசி அட்டைதாரர்களுக்கும் மறுவாழ்வு முகாம்களில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கும் வழங்கப்பட்டன. இத்திட்டத்திற்கென அரசால் ரூ.1,297 கோடி ஒதுக்கப்பட்டு, 2,12,17,756 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

### 1.17 உணவு மானியம்

தமிழக அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தி, அதன் மூலம் அரிசி மற்றும் கோதுமை விலையில்லாமலும், சர்க்கரை மானிய விலையிலும் வழங்குவதோடு சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும், பருப்பு

மற்றும் பாமோலின் மானிய விலையில் வழங்கவும், தமிழக அரசு உணவு மானியத்திற்கென அதிக அளவிலான செலவை ஏற்கிறது. 2021-22-ஆம் நிதியாண்டிற்கு உணவு மானியமாக ரூ.6,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும், 2021-22-ஆம் நிதியாண்டில் ரூ.9,324.24 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2022-23-ஆம் ஆண்டிற்கான உணவு மானியமாக ரூ.7,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.18 குடும்ப அட்டை தூய தரவுத் தொகுப்பு

போலிக் குடும்ப அட்டைகளை நீக்குவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. மே 2021 முதல் பிப்ரவரி 2022 வரை 1,98,264 தகுதியற்ற குடும்ப அட்டைகள்



நீக்கப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள பயனாளிகளை நிகழ்நேரத்தில் சேர்த்தல் / நீக்குதல் செய்யும் பொருட்டு, பிற அரசு துறைகளின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் பிறப்பு / இறப்பு தரவுகளைத் தற்போதைய குடும்ப அட்டை தரவுத் தொகுப்புடன் ஒப்பிட தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இறந்த நபர்களின் பெயர்கள் குடும்ப அட்டை தரவுத் தொகுப்பிலிருந்து உடனடியாக நீக்கம் செய்யப்படுகிறது. இதுவரை 12,54,716 உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

## 1.19 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்ட விவரம்

இந்த அரசு பதவியேற்ற பின்னர், இதுவரை 10,92,064 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. தகுதியுள்ள நபர்களுக்கு குடும்ப அட்டைகள் மிக விரைவாகவும், பெரும்பாலான நேர்வுகளில் விண்ணப்பித்த 15 நாள்களிலும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 1.20 நிலைத்திருக்கும் வளர்ச்சி இலக்குகள்

### 1.20.1 குறியீடு 2.1.4. "பட்டினியின்மை"

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி மற்றும் கோதுமை



விலையின்றி அனைத்து குடிமக்களுக்கும் வழங்குவதன் மூலம் மாநில அரசு அனைத்து குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்துள்ளதால், உணவுப் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் பட்டினியின்மை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி சர்க்கரை, துவரம் பருப்பு, பாமோலின் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருள்களும் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

### 1.20.2 குறியீடு

### 7.1. 2 “மலிவு விலையில் சுத்தமான எரிபொருள்”

மலிவு விலையில் நிலையாக கிடைக்கக்கூடிய நவீன எரிபொருள் அனைத்து குடும்பங்களுக்கும் கிடைக்கும் வகையில், சமையல் எரிவாயு (LPG) இணைப்பினை 90 சதவிகிதம் குடும்பங்களுக்கு தமிழக அரசு வழங்கியுள்ளது.



## இயல் - 2

## நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 பிரிவு 2 (7), நுகர்வோர் என்பவர் யார் என கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது :

"பணம் அல்லது வாய்மொழி உறுதி அல்லது ஓரளவு பணம் மற்றும் மீதியைச் செலுத்த வாய்மொழி உறுதி அல்லது பின்னர் பணம் செலுத்தும் முறையில் பொருள்களை வாங்குபவர் அல்லது சேவைகளைப் பெறுபவர் மற்றும் அத்தகைய பொருள்களைப் பயன்படுத்துபவர் மற்றும் சேவைகளைத் துய்ப்பவர் நுகர்வோர்.

"சட்டத்தின் படி எந்தப் பொருள்களையும் வாங்கும்" மற்றும் "எந்த சேவைகளைத் துய்க்கும் அல்லது கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும்" இணைய வழி மற்றும் நேரடியான பரிவர்த்தனைகளை மின்னணு வழிகளிலோ, தொலைபேசி வாயிலான பரிவர்த்தனை முறையிலோ, நேரடி விற்பனை முறையிலோ, பல நிலைகள் விற்பனை முறையிலோ செய்தலை உள்ளடக்கியது".

மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமானது, நுகர்வோரை வணிகர்களால்



ஏமாற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பதாகும். இதன்பொருட்டு, அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது :-

1. **நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இல் குறிப்பிடப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி நுகர்வோரை அதிகாரம் பெற்றவர்களாக மாற்றி அதன் மூலம் சரியானவற்றைத் தேர்வு செய்ய வழிவகை செய்தல்.**

2. **நுகர்வோர் குறைகளை உரிய காலத்திலும் பயனளிக்கக்கூடிய**

வகையிலும் பாரபட்சமின்றி தீர்வு செய்திட வழிவகை செய்தல்.

3. நுகர்வோர்களை ஏமாற்றப்படு-வதிலிருந்து பாதுகாக்க, நுகர்வோர் குறைதீர் ஆணையங்களை அணுகுவதற்கு முன்னரே மாற்றுவழியில் நுகர்வோர்களின் குறைகளைத் தீர்வு செய்தல்.

4. நுகர்வோர்களுக்குச் சேவைகள் அளிக்கக்கூடிய அரசுத் துறைகளின் செயல்முறையை மேம்படுத்துவதற்குரிய கொள்கை மாற்றங்களைப் பரிந்துரை செய்தல்.



பொது மக்களை அதிகாரம் பெற்ற நுகர்வோர்களாக மாற்றுவதில் பலன் தரக்கூடிய கீழ்க்காணும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன : -

## 2.1 குடிமக்கள் நுகர்வோர் மன்றம்

கல்வி நிறுவனங்களில், தலா 50 உறுப்பினர்களைக் கொண்ட குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 2000 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆசிரியர் நிலையிலான ஒருங்கிணைப்பாளர் ஆகியோரைக்

கொண்டு குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் பணிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நுகர்வோரின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை வலியுறுத்தி உரிய கால இடைவெளிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. பொது மக்கள் பொறுப்பான நுகர்வோர்களாக தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, மாணவர்களின் உதவியுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.



## 2.2 ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட நுகர்வோர் பாதுகாப்புத் துறை "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாத இதழை வெளியிட்டு வருகிறது. இந்த இதழ் பொதுமக்கள்/நுகர்வோர், மக்களிடையே நேரடித் தொடர்பில் உள்ள அரசுத் துறைகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் அனைத்து நூலகங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விழிப்பான மற்றும் சிறந்த நுகர்வோரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் காணொளிக் காட்சிகள் அடங்கிய குறுந்தகடு, ஒலி வடிவிலான

குறும்பாடல் ஆகியவற்றினை நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்ந்து தயாரித்து வருகிறது.

## 2.3 மாநில நுகர்வோர் சேவை மையம்

நுகர்வோர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சேவை குறைபாடு அல்லது ஏமாற்றப்பட்ட நேர்வுகள் குறித்து தெரிவிக்கவும், தீர்வு காணவும் ஒரு மாற்று குறைதீர் அமைப்பாக, மாநில நுகர்வோர் சேவை மையம் அரசால் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இச்சேவைகளை 044-2859 2828 என்ற தொலைபேசி எண்ணின் மூலம் அல்லது www.consumer@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியின் மூலம் பெறலாம். மேலும், www.consumer.tn.gov.in என்ற இணையதளத்தில்



உள்ள இணையவழியாகவும் நுகர்வோர் தங்களது புகாரினைப் பதிவு செய்யலாம்.

## 2.4 தேசிய நுகர்வோர் பாதுகாப்பு நாள் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் நாள் கொண்டாடுதல்

டிசம்பர் 24ஆம் நாளை தேசிய நுகர்வோர் பாதுகாப்பு நாளாக கொண்டாடுவதற்கும், மார்ச் 15ஆம் நாளை உலக நுகர்வோர் உரிமைகள் நாளாக கொண்டாடுவதற்கும் அரசால் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-ன் கீழ், நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக, குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை ஒருங்கிணைத்து, மண்டல/மாவட்ட

அளவில், கண்காட்சிகள், பேரணிகள், பரப்புரைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 குறித்து உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் பயிற்சியினை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் வழங்குவதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது, 07.03.2022 முதல் 25 நபர்கள் என்ற அளவில் அணிகளாகப் பிரித்து ஒவ்வொரு அணிக்கும் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது.



## 2.5 தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி (TNSCWF)

நுகர்வோர் நடவடிக்கைகளுக்காக ஒன்றிய, மாநில அரசுகள் தலா ரூ.50.00 இலட்சம் (50:50) பங்களிப்புடன் ரூ.1.00 கோடியில் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித் தொகுப்பினை மாநில அரசு உருவாக்கியுள்ளது. மாநில / மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் வசூலிக்கப்படும் அபராதத் தொகையும், கட்டணத் தொகையும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித் தொகுப்பில் செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித் தொகுப்பு ஏற்படுத்தப்பட்டதுடன், ஒன்றிய, மாநில

அரசுகளின் பங்களிப்பு 75:25 என்ற விகிதத்தில் ரூ.20 கோடி நிதி மூலதனத்தில் தமிழ்நாடு நுகர்வோர் நலநிதியம் (Corpus) ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிதியத் தொகை ரூ.20 கோடியானது வைப்புத் தொகைகளாக பராமரிக்கப்பட்டு, அதன் வட்டித் தொகையானது தமிழ்நாடு மாநில நுகர்வோர் நலநிதி (Corpus) இருப்புக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி மற்றும் மேற்கூறிய நிதியத்திலிருந்து வரும் வட்டித் தொகையினைக் கொண்டு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வுச் செயல்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## 2.6 தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் சங்கம் (TANSSCOPE)

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்திட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரைத் தலைவராகவும், அரசு மற்றும் அரசுசாரா துறையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டும், தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் சங்கம் எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

## 2.7 நுகர்வோர் குறைகளுக்கான சட்டபடியான தீர்வுகள்

2019-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-

I. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

II. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்

III. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

### 2.7.1 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

சென்னையிலுள்ள மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், நீதிமன்றம் போன்று



செயல்படும் அமைப்பாகும். நுகர்வோர் வாங்கிய / பெற்ற பொருளின் மதிப்பு / சேவையின் மதிப்பு ரூபாய் 50 இலட்சத்திற்கு மேலாகவும், ரூபாய் 2 கோடிக்கு மிகாமலும் இருக்கும் நேர்வுகள் சார்ந்த புகார்கள் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்டும், அவருக்குத் துணையாக இரண்டு நீதிமுறைசார் உறுப்பினர்களும் இரண்டு நீதிமுறைசாரா உறுப்பினர்களும் (இவர்களில் ஒருவர் பெண்) இருப்பர். இத்துறையின் நிர்வாகத்தைக் கவனிக்க துறைத் தலைவராக பதிவாளர் உள்ளார். மாநில நுகர்வோர் குறைதீர்

ஆணையத்தின் சுற்றுக் கிளையானது மதுரையில் 11.08.2012 முதல் செயல்பட்டு வருகிறது. 21.03.2022 அன்று வரை 30,699 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 27,539 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை ஆகியவை அந்தந்த வரையறைக்குட்பட்ட மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தீர்ப்புகளின் மீது மேல்முறையீடு செய்யப்படும் மனுக்கள் மற்றும் சீராய்வு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும்.



### 2.7.2 மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள்

எந்த ஒரு நுகர்வோரும் தான் வாங்கிய / பெற்ற பொருளின் மதிப்பு / சேவையின் மதிப்பு ரூ.50 லட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் புகார் மனு தாக்கல் செய்யலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன் படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் இருக்க வேண்டும். ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி அல்லது வழக்கறிஞர், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவராக இருப்பார். மாவட்ட நுகர்வோர் குறைதீர்

ஆணையத்தின் தலைவர் மற்றும் ஒரு பெண் உறுப்பினர் உள்ளிட்ட இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் செயல்படும். மாவட்ட ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 21.03.2022 வரை 1,28,523 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அதில் 1,16,034 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 2.8 மின்னணு வழியில் நுகர்வோர் வழக்கு தாக்கல் முறை (e-Filing)

மாநில ஆணையம், மாநில ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை மற்றும் அனைத்து மாவட்ட நுகர்வோர் ஆணையங்களிலும் மின்னணு வழியில் நுகர்வோர் வழக்குகள் இ-தாக்கல் செய்யும்



முறையானது 03.02.2022 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நுகர்வோர் / வழக்கறிஞரும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி / மின்னஞ்சலுக்கு அனுப்பப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொல்லை பயன்படுத்தி முறையான அங்கீகாரத்துடன் தங்களின் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உருவாக்கி, இ-தாக்கல் இணைய முகப்பில் பதிவு செய்து அதன் பிறகு புகார் அளிக்கலாம்.

## 2.9 சமரச மையம்

வழக்குகளை எளிதில் முடிப்பதற்கு ஏதுவான மாற்று வழியாக, பயிற்சி பெற்ற நடுவர் மூலம் பேச்சு

வார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக "சமரச மையம்" செயல்பட்டு வருகிறது. புகார்தாரர் / எதிர் மனுதாரர் பரஸ்பர திருப்திகரமான தீர்வை எவ்வித கட்டணமுமின்றி எளிதான முறையில் அடைய நடுவர் உதவுவார்.

வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை மற்றும் அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களிலும், நுகர்வோர் "சமரச மையம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது.



## இயல் - 3

## விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

உணவுப் பொருள் வழங்கல் ஆணையரகத்தில் ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் "விலைக்கண்காணிப்புப் பிரிவு" இயங்கி வருகிறது. அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் சில்லரை மற்றும் மொத்த விலைகளை வெளிச்சந்தையில் தினசரி இப்பிரிவு கண்காணித்து வருகிறது. இப்பிரிவானது, வெளிச்சந்தையில் எப்பொருளின் விலையாவது திடீரென்று அதிக அளவில் விலையேறும்போது,

தகுந்த விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதற்கு ஏதுவாக உரிய அறிக்கைகளை உயர் அலுவலர்களுக்குச் சமர்ப்பிக்கிறது.

## 3.1 தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் விலை கண்காணிப்புக் குழு (Price Monitoring Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இன்றியமையாப் பொருள்களின்



விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் வெளிச்சந்தையில் இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக ரூ.100 கோடி நிதியில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் நேர்வுகளில், நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளிச்சந்தையில் பொருட்களின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நவம்பர் 2021 மற்றும் டிசம்பர் 2021 மாதங்களில் தொடர் மழை காரணமாக,

தக்காளியின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த, பண்ணைப் பசுமைக் கடைகள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் மூலமாக மலிவு விலையில் தக்காளி விநியோகம் செய்து விலையேற்றத்தினைக் குறைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டது.

இவற்றுடன், மாநில அரசு, தேவை ஏற்படும்போது இன்றியமையாப் பொருள்களின் இருப்பினைக் கண்காணித்து முறைப்படுத்துகிறது. ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2021 ஆகிய மாதங்களில் பருப்பு வகைகளின் இருப்பு முறைப்படுத்தப்பட்டது.



# இயல் – 4

## அமலாக்கம்

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை அமல்படுத்த இரண்டு முக்கிய சட்டங்களான, கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 ஆகிய சட்டங்களை அமல்படுத்தி வருகிறது. கடத்தலில் தொடர்ந்து ஈடுபடும் கடத்தல்காரர்களைத் தடுப்புக்காவலில் வைக்க கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப்

பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 வழிவகை செய்கிறது.

காவல்துறை தலைமை இயக்குநர் இத்துறையின் தலைவர் ஆவார், அவரின் கீழ், சென்னை மண்டலத்தில் ஒரு காவல் கண்காணிப்பாளரும், மதுரை மண்டலத்தில் ஒரு காவல் கண்காணிப்பாளரும், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை உட்கோட்டங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நான்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் பணிபுரிகின்றனர். குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் 34 அலகுகளில் காவல் ஆய்வாளர்கள்



தலைமையில் 22 அலகுகளும், உதவி காவல் ஆய்வாளர் தலைமையில் 12 அலகுகளும் இயங்கி வருகின்றன. தலைமையிடத்தில் நிர்வாகம் மற்றும் நுண்ணறிவுப் பிரிவுகளில் இரண்டு காவல் ஆய்வாளர்கள் பணியாற்றுகின்றனர். எல்லையோர மாவட்டங்களில் இம்மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கும், வெளி மாநிலத்திலிருந்து இம்மாநிலத்திற்குள்ளும் இன்றியமையாப் பண்டங்கள் கடத்தலைத் தடுக்கும் முதன்மை நோக்கோடு, 5 சிறப்புச் சுற்றுக்காவல்படைகள் முறையே கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறைக்கு கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் 2 புதிய மண்டலங்களும், கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 6 புதிய அலகுகளும் உருவாக்க அரசாணை வெளியிடப்பட்டு தற்போது அவை உருவாக்கத்தில் உள்ளன.

**4.1 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள்**

கடுமையான கண்காணிப்பு மற்றும் சட்ட அமலாக்கத்தின் மூலம் பொது விநியோகத்திட்டப் பொருள்கள் கடத்தல் / பதுக்கல் தொடர்பான அச்சுறுத்தல்கள் பெரிய அளவிற்கு



கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் பல்வேறு அலகுகளில் 07.05.2021 முதல் 31.03.2022 வரை பதியப்பட்ட வழக்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**கைப்பற்றுகை விவரங்கள்**

**07.05.2021 முதல் 31.03.2022**

| வ. எண் | விவரம் | 07.05.2021 முதல் 31.03.2022 வரை | | |
|---|---|---|---|---|
| 1. | இன்றியமையா பண்டங்கள் சட்டம், 1955-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 7268 | | |
| 2. | மொத்த கைப்பற்றுகை | வழக்குகளின் எண்ணிக்கை | கைப்பற்றுகை அளவு | மதிப்பு (ரூபாயில்) |
| | அ) பொது விநியோகத்திட்ட அரிசி (குவிண்டால்) | 6191 | 51681 | 2,91,99,765 |
| | ஆ) பொது விநியோகத்திட்ட மண்ணெண்ணெய் (லிட்டர்) | 327 | 21,221 | 3,18,315 |

| | | | | |
|---|---|---|---|---|
| | இ) சமையல் எரிவாயு உருளைகள் (எண்ணிக்கை) | 621 | 728 | 6,55,200 |
| | ஈ) மற்றவை (மதிப்பு) ரூபாயில் | 129 | | 5,22,99,397 |
| 3. | மொத்த மதிப்பு ரூபாயில் | | | (தோராயமாக) 8,24,72,677 |
| 4. | கைது செய்யப்பட்டவர்கள் | | | 7433 |
| 5. | கைப்பற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | | | 1445 |
| 6. | கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980-இன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள் | | | 80 |
| 7. | வழக்குகளின் எண்ணிக்கை (கலப்பட டீசல்) | | | 44 |
| 8. | கைப்பற்றப்பட்ட கலப்பட டீசல் (லிட்டர்) | | | 4,15,681 |
| 9. | கைப்பற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | | | 49 |



# இயல் – 5

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய உன்னதப் பணிகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொண்டு வருகிறது. மாநில மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டு இந்நிறுவனம் 1972-ஆம் ஆண்டு அன்றைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர், நிறுவனங்கள் சட்டம், 1956 சட்டப்பிரிவு 25-ன் கீழ்

(நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப் பிரிவு 8) இந்நிறுவனம் 01.04.2010 அன்று பதிவு செய்யப்பட்டு "**இலாபம் இல்லை நட்டம் இல்லை**" என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் வசிக்கும் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதில் முன்னோடியாக செயல்படும் இத்தகைய நிறுவனத்தை நாட்டிலேயே முதன் முதலில் அமைத்த பெருமைக்குரியது தமிழ்நாடு.

## 5.1 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது 12 இயக்குநர்கள் கொண்ட இயக்குநர் குழுமத் தலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு



வருகிறது. இயக்குநர் குழுவின் தலைவராக மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் செயலாற்றி வருகிறார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், அமுதம் சில்லறை அங்காடிகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றில் 7,249 நிரந்தரப் பணியாளர்களையும், 5,111 பருவகாலப் பணியாளர்களையும் கொண்டு இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியாளர்களுடன் 4,928 சுமைதூக்கும்

தொழிலாளர்களும் 27,845 பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்களும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

### 5.2 நிறுவனத்தின் செயல்பாடுகள்

இந்திய உணவுக் கழகத்தின் முகவராக பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல் மற்றும் தரமான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமோலின் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்து



பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தல் ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியப் பணிகளாகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கீழ்க்கண்ட செயல் அலகுகளைக் கொண்டுள்ளது:

அ) 14.97 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 302 கிடங்குகள்

ஆ) 1456 நியாய விலைக் கடைகள் (1,245 முழு நேர மற்றும் 211 பகுதி நேர நியாய விலைக் கடைகள்)

இ) 21 நவீன அரிசி ஆலைகள்

ஈ) 92 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

உ) 3 பெட்ரோல் / டீசல் வழங்கும் நிலையங்கள்

ஊ) 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்

ஏ) 4 சமையல் எரிவாயு விநியோகிக்கும் முனையங்கள்

ஐ) 2,932 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

## 5.3 இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்தல்

### 5.3.1 அரிசி

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன் கீழ் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகத்தின் மூலம் பெற்றும், அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியினைப் பெற்றுத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகிறது.



தமிழகத்தின் பொது விநியோகத்திட்டம் மற்றும் இதர நலத்திட்டங்களின் சராசரி மாதாந்திர அரிசி தேவை 3.20 லட்சம் மெ.டன் ஆகும். ஒன்றிய அரசின் மாதாந்திர வரையறுக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் ஒதுக்கீட்டிற்கும் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்ட நுகர்விற்கும் இடையேயான பற்றாக்குறையை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் மூலமாக மெ.டன் ரூ.20,000 என்ற விலையில் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு ஈடு செய்யப்படுகிறது.

### 5.3.2 சர்க்கரை

பொது விநியோகத் திட்ட மாதாந்திர ஒதுக்கீட்டின்படி தோராயமாக 32,000 மெ.டன் சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ.13.50/- என்ற மானிய விலையிலும், மற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.25/- என்ற மானிய விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

### 5.3.3 கோதுமை

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013-இன் படி மாதத்திற்கு 30,647.933 மெ.டன் கோதுமை



ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சென்னை மற்றும் மற்ற மாவட்டத் தலைநகரங்களில் 10 கிலோ வீதமும், மற்ற பகுதிகளில் 5 கிலோ வீதமும் நியாய விலைக் கடைகளில் இருப்பின் அளவினைப் பொறுத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

### 5.4 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருள்களை வழங்குவதற்காக

தமிழக அரசால் கடந்த 14.04.2007 முதல் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு மற்றும் பாமோலின் சமையல் எண்ணெய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

குடும்ப அட்டைதாரர்களுக்கு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு மற்றும் பாமோலின் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் சராசரி மாதாந்திரத் தேவை முறையே 20,000 மெ.டன் மற்றும் 2,00,00,000 பாக்கெட்டுகள் ஆகும். இவை, தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000 ஆகியவற்றைப்



பின்பற்றி இணையதள திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. மாதம் ஒன்றிற்கு குடும்ப அட்டைதாரர்களுக்குத் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு ரூ.30/- என்ற மானிய விலையிலும் ஒரு லிட்டர் பாமோலின் சமையல் எண்ணெய் பாக்கெட் ரூ.25/- என்ற மானிய விலையிலும் நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இரு பொருள்களின் மானியச் செலவினை மாநில அரசே ஏற்று வருகிறது.

| விவரம் | மாதாந்திர ஒதுக்கீடு (பருப்பு மெ.டன்னில் மற்றும் பாமோலின் எண்ணெய் பாக்கெட்டு-களில்) | குடும்ப அட்டை தாரர்-களுக்கு வழங்கப்-படும் அளவு | விற்பனை விலை பருப்பு / கிலோ மற்றும் பாமோலின் எண்ணெய் பாக்கெட் / லிட்டர் | வெளிச் சந்தை விலை |
|---|---|---|---|---|
| கனடா மஞ்சள் பருப்பு / துவரம் பருப்பு | 20,000 | 1 கிலோ | ரூ.30/- | ரூ.95/- முதல் ரூ.105/- வரை |
| செறிவூட்-டப்பட்ட பாமோலின் எண்ணெய் | 2,00,00,000 | 1 லிட்டர் (910 கிராம்) | ரூ.25/- | ரூ.125/- முதல் ரூ.135/- வரை |

## 5.5 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்

01.10.2002 முதல் தமிழக அரசு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் நெல் கொள்முதல் செய்து வருகிறது.



பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் அதிகாரபூர்வ முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு வருகிறது. டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விவாயிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மாவட்ட ஆட்சியரின் ஆணையின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தல், நெல் கொள்முதல் நடைமுறைகள், சேமிப்பு மற்றும் இயக்கம் குறித்து

விரிவான வழிகாட்டுதல்கள் ஜுலை 2021 இல் வெளியிடப்பட்டுள்ளன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பட்டினைக் கண்காணித்திட மாவட்டந்தோறும் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | : | தலைவர் |
| 2. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) | : | கூட்ட அழைப்பாளர் |
| 3. | இணை இயக்குநர் (வேளாண்மை) | | |
| 4. | முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், த.நா.நு.பொ.வா.கழகம் | | |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் | | |
| 6. | விவசாயிகளின் பிரதிநிதிகள் இருவர். | | |



தேவையின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க மேற்படி கண்காணிப்புக் குழு முடிவு செய்கிறது. மேலும், இக்குழு விவசாயிகளின் குறைகளையும் நிவர்த்தி செய்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாட்டுத் திறனை அதிகரிக்க வழிவகை செய்கிறது.

நெல் கொள்முதல் நிலையங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டமைப்புகளைப் படிப்படியாக உருவாக்க

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி 574 நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பிறத்துறைகளின் பல்வேறு திட்டங்களின் வாயிலாக நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்திய அரசு நிர்ணயம் செய்யும் திரிபுகளுக்குள் நெல்லின் தரத்தினை உறுதி செய்யும் விதமாக விவசாயிகள் நெல்லினை வெயிலில் உலர்த்துவதற்கு ஏதுவாக உலர்களங்களை நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் அமைப்பது முக்கியமானதாகும்.



இதுவரை 433 உலர்களங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நேரடி நெல்கொள்முதல் நிலையங்களின் ஒட்டுமொத்தச் செயல்பாடுகளையும் மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு, பருவகால பட்டியல் எழுத்தர், பருவகால உதவியாளர், பருவகால காவலர் மற்றும் பருவகால சுமைதூக்கும் தொழிலாளர் ஆகியோர்களுக்கு கணிசமான சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. 01.04.2019 முதல் பருவகால பட்டியல் எழுத்தர்களுக்கான ஊதியம்

ரூ.4,860/-லிருந்து ரூ.8,784/-ஆகவும், பருவகால உதவியாளர்கள் மற்றும் பருவகால காவலர்களுக்கு ஊதியம் ரூ.4,809/-லிருந்து ரூ.8,717/-ஆகவும், உயர்த்தப்பட்டுள்ளது. (அரசாணை (2டி) எண்.56, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அ1) துறை, நாள் 30.12.2021). மேலும், பருவகாலப் பட்டியல் எழுத்தர்களுக்கு ரூ.120/-ம், பருவகால உதவியாளர்கள் மற்றும் பருவகால காவலர்களுக்கும் ரூ.100/-ம் வேலை செய்யும் நாட்களுக்கு பயணப்படியாக வழங்கப்படுகிறது. அதே போன்று பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மூட்டைக்கு



கையாளுதல் கூலி ரூ.3.25 லிருந்து ரூ.10/-ஆக 31.12.2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வியாபாரிகளின் நெல் விற்கப்படுவதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, ஒரு நிகழ்வில் குற்றப்புலனாய்வுத் துறை விசாரணைக்கும் அரசு ஆணையிட்டுள்ளது.

### 5.5.1 மின்னணு கொள்முதல்

விவசாயிகள் தங்களது நெல்லினை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பதற்கு

ஏதுவாக ஒரு பொது இணைய முகப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளால் பதிவேற்றம் செய்யப்படும் நில விவரங்கள் கிராம நிர்வாக அலுவலரால் இணையவழியில் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளித்த பின்னர், டோக்கன் எண் கொடுக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படும் நாள் மற்றும் நேரம் ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயிகளின் கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக (SMS) அனுப்பப்படும். கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்கான ரசீது தானாக தயாரிக்கப்பட்டு, தரம் மற்றும் எடையினைச் சரிபார்த்த பிறகு அதற்கான தொகை மின்னணு



பரிவர்த்தனை (Electronic Clearing System) மூலமாக பதிவு செய்யப்பட்ட வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு அதன் விவரம் சம்மந்தப்பட்ட விவசாயிகளின் பதிவுசெய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக (SMS) அனுப்பப்படும்.

ஒன்றிய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகையுடன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

| நெல் ரகம் | ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதார விலை (குவிண்டால் ஒன்றுக்கு) ரூ. | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை (குவிண்டால் ஒன்றுக்கு) ரூ. | விவசாயிக்கு வழங்கப்படும் கொள்முதல் தொகை (குவிண்டால் ஒன்றுக்கு) ரூ. |
|---|---|---|---|
| சன்ன ரகம் | 1,960/- | 100/- | 2,060/- |
| பொது ரகம் | 1,940/- | 75/- | 2,015/- |

### கே.எம்.எஸ். 2021-22 நெல் கொள்முதல் விவரம்

| கே. எம். எஸ் 2021-2022 | திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை | கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு சன்னரகம் (மெ.டன்னில்) | கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு பொது ரகம் (மெ.டன்னில்) | மொத்த நெல் கொள்முதல் (மெ.டன்னில்) | பயனடைந்த விவசாயி-களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 31.03.2022 வரை | 2,932 | 18,77,887 | 10,70,367 | 29,48,254 | 4,27,278 |

நடப்பு பருவத்தில் (2021-2022), 31.03.2022 வரை விவசாயிகளுக்கு மின்னணு முறையில் கொள்முதல் தொகையாக ரூ.6025.23 கோடியும் மாநில அரசின் ஊக்கத் தொகையாக ரூ.268.06 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.



### கொள்முதல் விவரம் (கே.எம்.எஸ். 2021-22) (மெ.டன்னில்) (31.03.2022 வரை)

(மெ.டன்னில்)

| | |
|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 28,88,589 |
| நடமாடும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் | 10,045 |
| கூட்டுறவுச் சங்கங்கள் | 49,620 |
| மொத்த நெல் கொள்முதல் | 29,48,254 |

### 5.5.2 அரவை முன்னேற்றம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 52,500 மெ.டன் மாதாந்திர அரவைத் திறன் கொண்ட 21 நவீன அரிசி ஆலைகளைக் கொண்டுள்ளது. இவை மட்டுமல்லாமல், 7,73,031 மெ.டன் மாதாந்திர அரவைத் திறன் கொண்ட 474 அரவை முகவர்கள் மற்றும் 1,08,525 மெ.டன் அரவைத் திறன் கொண்ட 109 பகுதி நேர முகவர்கள் ஆக மொத்தம் 583 அரவை

முகவர்களைக் கொண்டு நெல் அரவை செய்யப்படுகிறது. அரிசியின் தரத்தினை உயர்த்தும் வகையில் அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும், கருப்பு அரிசி நீக்கும் இயந்திரம் நிறுவுவது அவசியம். கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள பெரும்பாலான தனியார் அரவை ஆலைகளில் கடந்த 3 மாதங்களில் கருப்பு அரிசி நீக்கும் இயந்திரம் (கலர் சார்ட்டர்) பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கண்டுமுதல் அரிசியின் தரம் உயர்ந்துள்ளது.

## 5.6 உள்கட்டமைப்பு மேம்படுத்துதல்

### 5.6.1 கிடங்குகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மொத்தம் 302 சேமிப்புக் கிடங்குகள் செயல்பட்டு



வருகின்றன. இவற்றில் 13.31 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 260 கிடங்குகள் கழகத்திற்குச் சொந்தமானவையாகும். மீதமுள்ள 1.66 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 42 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்று பயன்படுத்தப்படுகின்றன. கடந்த மே 2021 முதல் நாளது தேதி வரை 1.13 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 46 கிடங்குகள், கூட்டுறவுத்துறை மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து வாடகை அடிப்படையில்

நெல் சேமிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்ட பொருள்களைப் பாதுகாப்பாக சேமித்து வைப்பதை உறுதிப்படுத்தவும், சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்தவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 5.6.2 நியாய விலைக் கடைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1,456 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 51 சொந்தக் கட்டடங்களிலும், 712 தனியார் வாடகை கட்டடங்களிலும், 693 பிற அரசுத்துறை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன.



## 5.7 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் இதர சேவைகள்

### 5.7.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

இன்றியமையா மற்றும் அன்றாடத் தேவையான நுகர்பொருட்கள் வெளிச்சந்தை விலையை விட குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 20 அமுதம் பல்பொருள் அங்காடிகளும், 72 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளும் சென்னை மற்றும் கடலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.7.2 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

## 5.7.3 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சிராப்பள்ளி,திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்படுகிறது.



## 5.7.4 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் பின்வருமாறு இயங்கி வருகின்றன.

| வ. எண். | மண்ணெண்ணெய் வழங்கும் நிலைய விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மொத்த விற்பனை நிலையம் | 01 |
| 2. | மொத்த /சில்லரை விற்பனை நிலையம் | 08 |
| 3. | சில்லரை விற்பனை நிலையம் | 27 |
| மொத்தம் | | 36 |

## 5.8 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருள்கள் வழங்குதல்

மே 2021 முதல் பிப்ரவரி 2022 வரையிலான காலத்தில் 5445.750 மெ.டன் அரிசியும், 651 மெ.டன்

கோதுமையும் அம்மா உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 5.9 இதர சேவைகள்

### 5.9.1 அரசு உப்பு விற்பனை

சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த அரசு தூள் உப்பு மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு ஆகிய இரண்டு விதமான உப்பு தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.



### 5.9.2 ஊட்டி தேயிலை மற்றும் டான்டீ விற்பனை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஊட்டி தேயிலைத் தூள் விற்பனை செய்ய தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஊட்டி தேயிலைத் தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.22/- என்ற விலையிலும் மற்றும் டான்டீ தூள் 100 கிராம்

பாக்கெட் ஒன்று ரூ.21/- என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### 5.10 உழவர் உதவி மையம்

நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடர்பான குறைகளை விவசாயிகள் பதிவு செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் "**உழவர் உதவி மையம்**" (கட்டணமில்லாத தொலைபேசி எண். 1800 599 3540) எனும் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள உழவர் பெருமக்கள் உதவி மையத்தை தொடர்பு கொண்டு தங்களுடைய புகார்களைப் பதிவு



செய்யவும் நெல் விற்பனை செய்வதற்குத் தேவையான அனைத்து விவரங்களையும் தெரிந்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5.11 தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்து, சேமித்து, உணவு தானியங்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருள்களைப் பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் முக்கியப் பணியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொண்டு வருகிறது. அனைத்து நிலைகளிலும் உணவுப் பொருள்களின் தரத்தினை உறுதி செய்ய மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. ஆய்வின்

அடிப்படையில் தரக்கோட்பாடுகளின்படி அனைத்து நிலைகளிலும் தரம் உறுதிசெய்யப்படுகிறது. விஞ்ஞான முறைப்படி கிடங்குகள் வடிவமைக்கப்பட்டு அவற்றில் நெல், அரிசி, பருப்பு, சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய பொருள்கள் சேமித்து வைக்கப்படுகின்றன. இன்றியமையாப் பொருள்கள் தரத்திலும் அளவிலும் கெடாமல் இருக்க பூச்சித் தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



## இயல் – 6

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது விஞ்ஞான முறையில் வேளாண் விளைப்பொருள்களைச் சேமித்து வைத்திட விவசாயிகள் பயன்பெற்றிட தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், 1958 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் முறையே 50 விழுக்காடுகள் பங்குகளைக் கொண்ட இந்நிறுவனத்தின் இரு பங்குதாரர்கள் ஆவர்.

## 6.1 கிடங்குகளின் கொள்ளளவு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 7.60 லட்சம் மெ.டன் கொள்ளளவில் 60 சொந்தக் கிடங்குகளுடன் செயல்பட்டு வருவதுடன், 15,250 மெ.டன் கொள்ளளவில் இரண்டு வாடகைக் கிடங்குகளையும் பயன்படுத்தி வருகிறது. கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 மண்டலங்களின் சேமிப்புக் கிடங்குகள் 7 மண்டல மேலாளர்களின் கண்காணிப்பில் செயல்படுகின்றன. கிடங்குகளின் பெருமளவு இடவசதியானது அரசு நிறுவனங்கள், விவசாயிகள் / வியாபாரிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பிற



நிறுவனங்களின் விவசாய விளைப்பொருள்கள், விதைகள், உரங்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் அரசிதழில் வெளியிடப்பட்ட பொருள்களைச் சேமிக்க பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 2020-21-ஆம் நிதியாண்டின் பயனீட்டளவு சராசரி 79 விழுக்காடு ஆகும். 21.03.2022 அன்று உள்ளபடி இந்நிறுவனத்தின் பயனீட்டு அளவு 85 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

## 6.2 தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சேமிப்பு இழப்பு, நடையிடை இழப்பினைத் தொடர்ந்து கண்காணித்து, இழப்பினைக் குறைந்தளவில்

தொடர்ந்து வைத்திட திறம்பட முயற்சி எடுத்து வருகிறது. இதன் பயனாக கடந்த 2020-2021ஆம் நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட சேமிப்பு இழப்பான 0.5 விழுக்காட்டினைக் காட்டிலும், சேமிப்பு இழப்பு சராசரியாக 0.07 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

## 6.3 பூச்சி தடுப்பு நடவடிக்கைகள்

பூச்சிக்கட்டுப்பாட்டுப் பணியினை ஒரு இணைப் பணியாக தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. பொது மற்றும் தனியார் துறைகளின் பலதரப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இந்நிறுவனம் பூச்சிக்கட்டுப்பாடுச் சேவைகளை விரிவான



வகையில் தொடர்ந்து அளித்து வருகிறது. இந்நிறுவனத்தின் பூச்சித் தடுப்புப் பிரிவு எலித்தொல்லை, கரையான் தொல்லை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல், கட்டுமானப் பணிகளுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கரையான் ஒழிப்புப் பணி, கொசுத்தொல்லை மற்றும் பொதுவான பூச்சித் தொல்லை ஒழிப்புப் பணிகளையும் சிறப்பாகச் செய்து வருகிறது. கடந்த 2021-2022 ஆம் நிதியாண்டில் பூச்சித் தடுப்பு பணி மூலம் 21.03.2022 நிலவரப்படி ரூ.53.41 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

## 6.4 நிதிநிலை செயலாக்கம்

2020-2021-ஆம் நிதியாண்டில் (தணிக்கை செய்யப்படாத) இந்நிறுவனத்தின் மொத்த நிகர வருமானம் ரூ.24.35 கோடியாகும். கடந்த 2019-2020-ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் ஈட்டிய மொத்த நிகர வருமானமானது ரூ.24.11 கோடியாகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது தனது இரு பங்குதாரர்களான, தமிழ்நாடு அரசுக்கும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கும் நிகர லாபத்தில் 30 விழுக்காட்டினை ஆதாயப்பங்காக வழங்கி வருகிறது. கடந்த 2020-2021-ஆம் நிதியாண்டிற்கான ஆதாயப்பங்காக தலா ரூ.3.65 கோடியினை (தணிக்கை செய்யப்படாத) வழங்க உள்ளது.



## 6.5 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகள் மூலம் கடன் வழங்குதல்

சேமிப்புக் கிடங்கு அபிவிருத்தி ஒழுங்குமுறை ஆணையச் சட்டப்படி இந்நிறுவனம் 59 சேமிப்புக் கிடங்குகளை ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்துள்ளது. நாமக்கல் மாவட்டம், சின்னதம்பிபாளையத்தில் புதிதாகக் கட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கை சேமிப்புக் கிடங்கு அபிவிருத்தி ஒழுங்கு முறை ஆணையத்திடம் பதிவு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் விவசாயிகளிடையே மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளின் பயன்பாடு மற்றும் கடன் பெறும் வசதி குறித்து பெருமளவு விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளது. 2021-2022-ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் பல்வேறு சரக்கு வைப்பாளர்களுக்கு, 62 மாற்றத்தக்க சேமிப்பு கிடங்கு இரசீதுகளை

வழங்கி அதனை வங்கிகளில் அடமானம் வைத்து ரூ.1687.85 இலட்சம் கடனாக விவசாயிகள் / வியாபாரிகள் பெற்று உள்ளனர். இந்நிறுவனத்தில் மின்னணு முறையில் மாற்றத்தக்க சேமிப்பு கிடங்கு இரசீதுகளை தனியார் சரக்கு வைப்பாளர்களுக்கு அளித்திடும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

**அர. சக்கரபாணி**
**உணவு மற்றும் உணவுப்பொருள்**
**வழங்கல் துறை அமைச்சர்.**




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வணிகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவரங்கள், உணவு மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் அவர்களுடன் 01.04.2022 அன்று புதுதில்லியில் ஆலோசனை**



அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.01.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது



திருவாரூரில் உழவர்களை நேரில் சந்திக்க
களத்திற்கே சென்ற நம் மாண்புமிகு முதலமைச்சர்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஈவுத்தொகை வழங்கல்




" காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்



" விண்ணப்பித்த 15 நாட்களில் குடும்ப அட்டை"
07.05.2021 முதல் 21.03.2022 வரை
10,92,064 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன




உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதியலும் நாட்டை உருவாக்கும் பணியில்
முதல்வராய் இருக்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் தலைமையில் முதன்மையான தமிழகத்தை
உருவாக்குவோம் !